தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
(பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவை)

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2001-2002)

எட்டாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: 3 - MAY 2002)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை - 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(பன்னிரெண்டாவது சட்டமன்றப் பேரவை)

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2001–2002)

எட்டாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை - 600 009.

53-498—1


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

	பக்கங்கள்
குழு உறுப்பினர்கள்	(iii)
அறிக்கை	1-3

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(பன்னிரெண்டாவது பேரவை)

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு (2001-2002)

(2001ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது)

தலைவர்

1. திரு. பி.எம். நரசிம்மன்
அரசு தலைமை கொறடா

உறுப்பினர்கள்

2. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்
3. திரு. ப. ஆண்டிவேல்
4. திரு. சொ. கருப்பசாமி
5. திரு. மே.ப. காமராஜ்
6. திரு. சி. சண்முகம்
7. திரு. டி. சுதர்சனம்
8. திரு. வி.ஏ. செல்லையா
9. திரு. கே.கே. பாலசுப்பிரமணியன்
10. திரு. டி.பி.எம். மைதீன்கான்
11. திரு. ஜெக. வீரபாண்டியன்

செயலகம்

திரு. செ.சு. ஞானகிராமன்	..	முதன்மைச் செயலாளர்
திரு. வெ. இராசாராமன்	..	செயலாளர்
திருமதி. பானுமதி ஆனந்தராஜன்	..	கூடுதல் செயலாளர்
திரு. ஜி. அனீஸ் அஹமத்	..	துணைச் செயலாளர்
திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன்	..	சார்புச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு (2001-2002)

எட்டாவது அறிக்கை

பெறுநர்

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை-600 009.

முகவுரை

2001-2002ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு தனது எட்டாவது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறது.

குழுவின் கூட்டம்

2. 2001-2002ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 2002ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 9ஆம் நாள் சென்னையில் கூடியது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் 1997–98ஆம் ஆண்டிற்கான 14–வது ஆண்டறிக்கை.

3. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் 1997-98ஆம் ஆண்டிற்கான 14-வது ஆண்டறிக்கை, 1 வருடம் 9 மாதங்கள் 12 நாட்கள் காலதாமதமாக 20-1-2001 அன்று பேரவைமுன் வைக்கப்பட்டது. ஆண்டறிக்கை காலதாமதமாக பேரவைமுன் வைக்கப்பட்டது தொடர்பாக திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அரசு செயலாளர், சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, திருமதி குத்சியாகாந்தி, இ.ஆ.ப., தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், டாக்டர் சந்தோஷ்பாபு, இ.ஆ.ப., செயல் இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், திரு. வி. தங்கவேலு, இ.ஆ.ப., இணைச் செயலாளர், சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஆகியோர் குழுவின் முன் நேரில் வந்து சாட்சியம் அளித்தனர். அது குறித்த விபரங்கள் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

4. 1997-98ஆம் ஆண்டுக்கான கணக்குகள் எந்த தேதியில் தொகுக்கப்பட்டன என குழு வினவியபோது, கணக்குகள் 30-4-1998-ல் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 30-4-1999-ல் தான் தொகுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் முந்தைய ஆண்டுகளின் கணக்குகளைத் தொகுப்பதில் காலதாதம் ஆனதால் 1997-98-ஆம் ஆண்டுக் கணக்குகளைத் தொகுப்பதிலும் தாமதம் ஏற்பட்டது எனவும் 1997-98-ஆம் ஆண்டுக் கணக்குகளை தொகுக்கும்போது அதில் ஒரு சில திட்டங்களில் குறைபாடுகள் இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு சம்பந்தப்பட்ட 3, 4 பேர்கள் மீது தற்காலிகப் பணி நீக்கம் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதின் காரணமாகக் கணக்குகள் தொகுப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகத் தலைவி மற்றும் மேலாண் இயக்குநர் தெரிவித்தார்.

5. காலதாமதத்திற்கான உண்மையான காரணங்கள் குழுவிற்கு அளித்துள்ள விளக்க அறிக்கையில் ஏன் சொல்லப்படவில்லை என குழு வினவியபோது உண்மையான காரணத்தைக் குழுவிற்கு எழுத்து மூலம் விளக்கம் அளிக்கும்பொழுது தராதது தவறுதான். இனிமேல் இதுபோன்ற தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்வதோடு குழுவின் அறிவுரைப்படி நடந்துகொள்கிறோம் என்று உறுதியளித்தார்.

6. சம்பந்தப்பட்ட நிதி ஆண்டு முடிந்து 1 மாதத்திற்குள் கணக்குகள் தொகுக்கப்பட வேண்டும். நிதி ஆண்டு முடிந்து மூன்று மாதத்திற்குள் தணிக்கையாளர்கள் தணிக்கை முடித்து தணிக்கை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். பின்னர் மூன்று மாதத்திற்குள் தணிக்கை அறிக்கை மாநில கணக்காய்வுத் துறைத் தலைவருக்கு அனுப்பப்பட்டு அவரது கருத்துரைச் சான்றிதழுடன் பொதுக் குழுக் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறப்பட வேண்டும். இவ்வறிக்கை பின்னர் அச்சிடப்பட்டு அரசுக்கு அனுப்பிப் பின்னர் சட்டமன்றத்தில் வைத்தல் வேண்டும் எனத் தெளிவாக நிதித் துறையிலிருந்து ஆணைகள் வெளியிட்டிருந்தும் இவ்வாறு காலதாமதம் செய்வது முறைதானா என்றும், இனி வருங்காலங்களில் காலதாமதம் ஏற்படாமலிருக்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் எனக் குழு வினவியதற்குத் தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் பின்வருமாறு பதிலளித்தார்:

"1999-2000 ஆண்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில் இன்டர்னல் ஆடிட்டும், ஸ்டாட்டூட்டரி ஆடிட்டும் முடிந்து விட்டது என்றும் தற்பொழுது கணக்குகள் மாநில கணக்காயர் அலுவலகத்தில் இருக்கிறது என்றும் இம்மாத இறுதிக்குள் முடியுமென்றும் கூறியுள்ளனர். 2000-2001-ஆம் ஆண்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில் கணக்குகளைத் தயார் செய்து

வைத்திருப்பதாகவும் செப்டம்பர் மாத இறுதிக்குள் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு இந்த ஆண்டு முதல் உரிய காலத்தில் சட்டமன்றத்தில் வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்."

7. அச்சிடப்பட்ட அறிக்கை 20-3-2000 அன்று பெறப்பட்ட பிறகும் கூட ஆறு மாதங்கள் கழித்து அதாவது 11-9-2000 அன்றுதான் அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே காலதாமதமான நிலையில் கழகம் இத்தகைய காலதாமதத்தையாவது குறைத்திருக்கலாம் அல்லவா? என குழு வினவியபோது தற்போது இது சம்பந்தமாகக் காலக்கெடுவைக் குறிப்பிட்டுத் தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது எனவும், அதனடிப்படையில் இந்த வருடத்திலிருந்து கணக்குகள் முறையாக உரிய காலத்தில் அவைக்கு அளிக்கப்படும் என்று துறைச் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட துறைச் செயலாளர் மற்றும் தலைவி மற்றும் மேலாண் இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ஆகியோர் அளித்த விளக்கத்தினையும் உறுதிமொழியினையும் ஏற்று தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் 1997-98-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினைப் பதிவு செய்யலாம் எனக் குழு முடிவு செய்தது.

2002ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29ஆம் நாள் உதகமண்டலத்தில் நடைபெற்ற பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

பி.எம். நரசிம்மன்,

உதகமண்டலம்,
29-1-2002.

தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS